**தலைப்பு – 101 – பௌத்த விவகார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை பௌத்த விவகார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியிலிருந்து ஒவ்வொரு தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் காணப்படுகின்றன.

## 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| **தலைப்பு** | **திணைக்களம்** |
|---|---|
| 201 | பௌத்த சமய அலுவல்கள் திணைக்களம் |
| 202 | முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் |
| 203 | கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம் |
| 204 | இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் |
| 205 | பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் |

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மேலே 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சு மற்றும் திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்க கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் அந்த அமைச்சினதும் திணைக்களங்களினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவான கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடியவாறானவையாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்ட திகதி |
|---|---|---|
| 101 | புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சு | 2015.07.17 |
| 201 | பௌத்த விவகார திணைக்களம் | 2015.06.30 |
| 202 | முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் | 2015.07.14 |
| 203 | கிறிஸ்தவ சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் | 2015.07.08 |
| 204 | இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் | 2015.07.16 |
| 205 | பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் | 2015.07.22 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணிவருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடுகள் மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 05 திணைக்களங்களுக்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 2,005.1 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 1,942.0 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அமைச்சு மற்றும் திணைக்களங்களின் தேறிய நிதி ஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 0.30 மில்லியனிற்கும் ரூபா 32.4 மில்லியனிற்கும் இடையிலான வீச்சில் அல்லது மொத்த தேறிய ஏற்பாட்டில் 0.8 சதவீதத்திற்கும் 15.2 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிலான அளவில் நிலவியது. விபரம் பின்வருமாறு.

| **தலைப்பு** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|
| | **தேறிய ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| 101 | 665.1 | 654.9 | 10.2 | 1.5 |
| 201 | 846.5 | 814.1 | 32.4 | 3.8 |
| 202 | 91.7 | 77.8 | 13.9 | 15.2 |
| 203 | 148.6 | 144.9 | 3.7 | 2.5 |
| 204 | 214.8 | 212.2 | 2.6 | 1.2 |
| 205 | 38.4 | 38.1 | 0.3 | 0.8 |
| **மொத்தம்** | **2,005.1** | **1,942.0** | **63.1** | **3.1** |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்தஎல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 05 திணைக்களங்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறான | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 10101 | 8.0 | 5.9 | 1.9 | 4.3 | 22.0 | 12.7 |
| 20101 | 20.0 | 19.9 | 10.0 | 12.8 | 55.0 | 40.5 |
| 20201 | 2.0 | 1.8 | 0.9 | 1.3 | 12.0 | 6.5 |
| 20301 | 1.5 | 1.2 | 0.5 | 0.6 | 8.5 | 2.9 |
| 20401 | 0.4 | 4.0 | 1.8 | 3.0 | 11.5 | 8.4 |
| 20501 | 3.0 | 1.7 | 1.3 | 1.5 | 11.0 | 7.6 |

## 2.3 கட்டு நிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஐந்து திணைக்களங்களில் நான்கினது 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கட்டு நிதி மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 50.363 மில்லியனாக காணப்பட்டது. விபரம் பின்வருமாறு.

| அமைச்சு / திணைக்களம் | கட்டு நிதிக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சு | 7002/0000/00/0209/0014/000 | 2,932,293 |
| முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் | 7002/0000/00/0135/0013/000 | 37,034,714 |
| | 7002/0000/00/0135/0014/000 | 4,204,483 |
| கிறிஸ்தவ சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் | 7002/0000/00/0404/0014/000 | 1,191 |
| பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் | 7002/0000/00/0141/0014/000 | 6,191,253 |
| **மொத்தம்** | | **50,363,934** |

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 05 திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 68.9 மில்லியன் ஆகும். விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு / திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| ------------------------------- | ---------------------------------- | ---------------------- |
| | | ரூபா |
| புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சு | 6000/0000/00/0015/0015/000 | 47,478,818 |
| பௌத்த விவகார திணைக்களம் | 6000/0000/00/0015/0083/000 | 4,890,085 |
| முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் | 6000/0000/00/0015/0084/000 | 16,422,508 |
| கிறிஸ்தவ சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் | 6000/0000/00/0015/0085/000 | 3,150 |
| இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் | 6000/0000/00/0015/0086/000 | 121,681 |
| பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் | 6000/0000/00/0015/0087/000 | 8,090 |
| | | -------------- |
| **மொத்தம்** | | **68,924,332** |
| | | ========= |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழான

திணைக்களங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்களுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களுக்குட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகளில் பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 101 – பௌத்த விவகார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) |
| (ii) | இழப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |

### 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்

மீளாய்வாண்டில் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாவொன்றிற்கு 2015 யூன் 15 ஆந் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக, நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 35 சதவீதத்திற்கும் 82 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) இருபத்திரண்டு செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 302,216,478 தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 331,747,506 பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 331,784 சேமிக்கப்பட்டிருந்தது. இந்த சேமிப்பு ரூபா 29,523,352 தொகையினை விஞ்சி ரூபா 29,855,136 தொகையான பொறுப்பினை ஏற்படுத்தியிருந்தது.

**3.4 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

விடய இலக்கம் 10101 இன் அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 209,881 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதி 01 முதல் 02 வருடங்கள் வரையான காலமாக நிலவி வருகின்றதெனினும், அந்த நிலுவை மீதியினை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**3.5 உள்ளகக் கணக்காய்வு**

33 துறைகளை உள்ளடக்கும் விதத்தில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான 5 திணைக்களங்களுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தபோதிலும், மீளாய்வாண்டில் அமைச்சுடன் தொடர்புடைய 2 உள்ளக கணக்காய்வு பரிசோதனைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அமைச்சினால் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்கள் அல்லது அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் எதுவித உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனைகளும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.6 தீர்க்கப்படாத பொறுப்புகள்

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத வருடமொன்றிற்கு குறைந்த காலமாக நிலவிவரும் பொறுப்புகளின் கூட்டுத் தொகை ரூபா 29,862,814 ஆகும்.

### 3.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப் பிரமாணம் 103(1) மற்றும் 104 | 55,260 | அமைச்சிற்கு சொந்தமான இரு வாகனங்களுக்கு நேர்ந்த இரு விபத்துக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 751(1) மற்றும் 751(2) | 18,564,224 | 32 கிராமிய ஆலயங்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட ஆவணத் திரைப்படங்களின் இறுவெட்டுக்கள் பொருட்கள் பதிவேட்டுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இறுவெட்டுக்களுக்கான விநியோகக் கட்டளை மற்றும் பெறுவனவுக் கட்டளைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. ‘‘தெஹம் நிவஹனய் அபேகம ரெந்தி ஹெட்ட தினய்’’ |

| | | | |
|---|---|---|---|
| | | | எனும் பெயரிலான 39,000 கைநூல்களும் கிராமிய ஆலயங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட 96 டீ.வீ.டீ தட்டுக்களும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1647 (ஆ) | | மோட்டார் வாகனமொன்றிற்குப் பொறுப்பாகவிருந்த சாரதிகள் 3 சந்தர்ப்பங்களில் மாற்றப்பட்டிருந்த போதிலும், சாரதிகளை மாற்றும் போது வாகனத்தின் உபகரணங்கள் தொடர்பாக மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 395 (இ) | | 2014 ஆம் ஆண்டிற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று கால தாமதத்தின் பின்னர் 2015 மே 15 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்தது. |
| (v) | நிதிப்பிரமாணம் 1646 | | அமைச்சிற்குச் சொந்தமான 09 குழாம் வானங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தப் பொழிப்பு அறிக்கைகள் என்பன 2015 யூலை 30 ஆந் திகதியளவிலும் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** | **பொது நிருவாகச் சுற்றுநிருபம்** | | |
| (i) | 2006 யூலை 14 ஆந் திகதிய 11/2006 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 3(vii) ஆம் பந்தி | 125,690 | விசேட சந்தர்ப்பமொன்றில் உரிய செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேலதிக எரிபொருள் வழங்க முடியுமெனினும், அமைச்சின் வாகனமொன்றிற்கு 2014 ஆம் ஆண்டில் 06 மாதங்களில் ஒவ்வொரு மாதமும் மேலதிக எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. |

**3.8 செயலாற்றல்**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள் (நோக்கத்திற்கு அப்பாற்பட்டவை போன்றன)**

நேபாளத்தின் லும்பினி நகரில் அமைந்துள்ள துட்டகைமுனு ஓய்வு மண்டபத்தின் நிர்மாணப் பணிகள் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அந்த ஓய்வு மண்டபத்தினை பூர்த்தி செய்வதற்கு மீளாய்வாண்டில் ரூபா 53,198,264 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய வடிவினதாக இருந்ததுடன் அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(ஆ) "தெஹெம் நிவஹனய் - அபேகம ரெந்தி ஹெட்ட தினய்" கைநூலை அச்சிடல்**

புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சினால் 2013 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு திகதியான 2014 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையிலும் "தெஹெம் நிவஹனய் அபேகம ரெந்தி ஹெட்ட தினய்" நிகழ்ச்சித்திட்டத்திற்காக அச்சிடப்பட்ட கைநூலொன்றிற்காக 03 சந்தரப்பங்களில் ரூபா 4,790,000 தொகை தனியார் அச்சகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் கீழ் வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அரச கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 3.2.2 (அ) வழிகாட்டியின் பிரகாரம் தேசிய ரீதியாக போட்டி அடிப்படையில் கேள்வி மனு கோரப்படாதிருந்ததுடன், 4.3 வழிகாட்டியின் பிரகாரம் மொத்தக்கிரய மதீப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ‘‘தெஹெம் நிவஹனய் அபேகம ரெந்தி ஹெட்ட தினய்’’ கைநூல் அரச அச்சகத்தில் அச்சிடப்படாமையால் அரசிற்கு ரூபா 3,049,000 இழப்பு ஏற்பட்டிருந்தது.

**(ஆ) ‘‘தெஹெம் நிவஹனய் அபேகம ரெந்தி ஹெட்ட தினய்’’ நிகழ்ச்சித்திட்டத்தினை தேசிய வேலைத்திட்டமொன்றாக ஊடகங்கள் மூலம் சமூகமயப்படுத்தும் செயற்திட்டம்**

---

நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய வழிகாட்டி இறுவெட்டினை நிர்மாணித்தல், தொனிப்பொருள் பாடலை நிர்மாணித்தல், 35 டெலிபூரகங்களை நிர்மாணித்தல் போன்ற 03 செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டில் சேவை வழங்குனர்களுக்கு ரூபா 20,670,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், அக்கொடுப்பனவுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) நிதிப்பிரமாணம் 36 இன் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதியேற்பாடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் கொள்வனவு திட்டத்தில் இந்த செயற்பணிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) செயற்திட்டத்தின் பிரதான நோக்கம் தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றாக பொது ஊடகத்தை பாவித்து ‘‘தெஹெம் நிவஹனய் அபேகம ரெந்தி ஹெட்ட தினய்’’ எனும் நிகழ்ச்சித்திட்டத்தை சமூகமயப்படுத்தல் எனினும், சேவைகளை வழங்கிய நிறுவனத்தால் அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட டீ.வீ.டீ தட்டுக்கள் பொது ஊடகத்தின் ஊடாக சமூகமயப்படுத்தப்படுவதற்குப் பதிலாக அமைச்சில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் செயற்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை.

**(ஆ) 32 கிராமிய ஆலயங்களின் ஆவணத் திரைப்படங்களைத் தயாரித்தல்**

முப்பத்திரண்டு கிராமிய ஆலயங்களின் ஆவணத் திரைப்படங்களைத் தயாரிப்பதற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அமைச்சினால் ரூபா 18,564,224 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 ஆம் ஆண்டிற்கான புனித தலங்களை அபிவிருத்தி செய்வதற்காக 101-2-6-1-2502 ஆம் செலவின விடயத்தின் கீழ் ரூபா 138,000,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாட்டினைப் பயன்படுத்தி 32 கிராமிய ஆலயங்களின் ஆவணத் திரைப்படங்களை தயாரிப்பதற்காக ரூபா 15,247,224 செலவிடப்பட்டிருந்தது.

(ii) இதற்காக 2013 ஆம் ஆண்டில் 03 நிறுவனங்களுக்கு முற்பணமாக ரூபா 3,317,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்த முற்பணத்தினை மீளாய்வாண்டில் தீர்ப்பனவு செய்யும் போது மீண்டெழும் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதற்காக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினமாகிய ரூபா 14,247,224 மூலதனச் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(iii) அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் இலங்கை அரசினால் நிதியளிக்கப்படுகின்ற செயற்திட்டங்களுக்கு தேசிய ரீதியில் போட்டி அடிப்படையிலான கூறுவிலை கோரப்பட வேண்டுமெனினும், அடிப்படையின்றி செயற்திட்டத்தைக் கூறுகளாக பிரித்து 07 வழங்குனர்களிடமிருந்து மாத்திரம் விலை மனுக்கள் கோரப்பட்டு வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) இந்த சீ.டி தயாரிப்பின் பிரதான நோக்கம் புராதன வெஹர விகாரைகள் மற்றும் அவற்றின் பாரம்பரியங்களை பாதுகாத்தல் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், அதற்காக எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வுத் திகதியான 2015 சனவரி 20 ஆந் திகதியளவிலும் இந்த சீ.டி அமைச்சின் பொறுப்பில் காணப்பட்டது.

**3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றிருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

**(அ) "2600 Years of Sumbuddhathva" எனும் பெயரிலான நூலினை அச்சிடல்**

2600 சம்புத்தத்வ ஜயந்தியின் பூர்த்தியினை முன்னிட்டு "2600 Years of Sumbuddhathva"எனும் நூலின் 2,000 பிரதிகளை அச்சிடுவதற்கு அமைச்சு மற்றும் புத்தசாசன நிதியத்தினால் ரூபா 4,053,000 கூட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்ததெனினும், இந்த அச்சிடல் நடவடிக்கையின் போது அரச கொள்வனவு வழிகாட்டியின் 4.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அச்சிடப்பட்டு அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த புத்தகங்கள் நிதிப்பிரமாணம் 454 மற்றும் 751 இன் பிரகாரம் இருப்புப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. புத்தகமொன்றின் கிரயம் ரூபா 3,203 ஆக இருந்ததெனினும் ரூபா 5,000 என புத்தகமொன்றின் விலை குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே, புத்தக விற்பனைக்காக முறையான நடைமுறையொன்றில்லாமல் அச்சிடப்பட்டிருந்தமையின் காரணமாக, எஞ்சிய ரூபா 5,172,845 கிரயமான 1615 புத்தகங்கள் புத்தசாசன நிதியத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சின் பணிப்பாளர் (அபிவிருத்தி) பதவிக்கு இலங்கை நிர்வாக சேவையின் தரம் I இன் உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்ட தினம் அல்லது 2012 திசெம்பர் 31 ஆகிய இரு தினங்களில் முதலாவதாக வரும் திகதி வரை மாத்திரம் செல்லுபடியாகும் வகையில் நீதிமன்றப் பதிவாளர் சேவையின் தரம் I இன் உத்தியோகத்தரொருவர் மேற்படி பதவிக்கு 2010 யூலை 07 ஆந் திகதிய அமைச்சரவை மேவுகை அங்கீகாரத்தின் கீழ் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த நியமனம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைய வேண்டுமெனினும், அத்திகதியின் பின்னரும் 2014 திசெம்பர் 05 ஆந் திகதி வரை அந்த உத்தியோகத்தருக்கு ரூபா 1,094,075 சம்பளமாக முறையான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

**3.11 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

அமைச்சிற்குரிய முன்னைய ஆண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்காத பந்திகளின் தொடர்பு பின்வருமாறு.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2012 | 9.1 | தேவை மற்றும் பொருத்தப்பட வேண்டிய கெமராவின் அளவு தொடர்பான முன் மதிப்பீடு இன்றி அமைச்சின் வளாகத்தில் ரூபா 1,111,500 செலவில் CCTV கெமரா முறைமை பொருத்தப்பட்டிருந்தது. |
| 2012 | 9.2 | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, தஹம்பாய கட்டிடத்திற்காக ரூபா 27,198,047 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்கான உசாத்துணைக் கட்டணமாக ரூபா 1,474,994 செலுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 4,561,696 பெறுமதியான பொருட்கள் குறித்த நியமங்களின்றி நீண்ட காலப்பாவனைக்குத் தகுதியற்ற பொருட்களாக இருந்தன. |
| 2012 | 9.3 | தஹம்பாய கட்டிடத்தின் உள்ளக அலங்காரம் மற்றும் திட்டமிடல் செயற்பாடுகளுக்கான ஒப்பந்தப் பெறுமதியில் 2.8 சதவீதத்தைச் செலுத்தும் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்த ஆலோசனை கம்பனிக்கு தமது பொறுப்புகளை உரியவாறு நிறைவேற்றாமை, முறையற்ற வகையில் நடவடிக்கை எடுத்தல் மற்றும் சேவை உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறல் போன்ற நலிவுகள் இருந்தபோதும், அமைச்சினால் அக்கம்பனிக்கு ரூபா 1,474,994 செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| 2012 | 10.1 | அமைச்சினால் ரூபா 653,773 தொகை செலவிடப்பட்டு வெளி நாடொன்றிலிருந்து நன்கொடையாக வழங்கப்பட்ட 298 கணனிகள் பெறப்பட்டிருந்ததுடன், அவை எவ்வித திட்டமிடலோ பெறப்பட்டதற்கான உறுதிப்படுத்தலோ இல்லாமல் பல்வேறு நபர்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. |
| 2012 | 10.3 | இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட கபிலவஸ்துபுர ஸ்ரீ சர்வஞ்ச தாதுன் வஹான்சேவை காட்சிப்படுத்தல் பொருட்டு அமைச்சினால் ரூபா 15 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக வாடகை அடிப்படையில் LED திரை மற்றும் CCTV கெமரா என்பன பொருத்தப்பட்டிருந்தன. |
| 2011 | 9.1 | 2600 சம்புத்தத்வ ஜயந்திக்கு இணையாக அமைச்சினால் ரூபா 4,795,416 தொகையான சிக்கனமற்ற கிரயத்தைச் செலவிட்டு அநுராதபுர பிரதேசத்தில் நுழைவு வீதிக்கு குறுக்காக நிர்மாணிக்கப்பட்ட 5 தோரணங்கள் பதிவு செய்யப்பட்டிராததுடன், கழற்றி அகற்றப்பட்ட தோரணங்களுக்குரிய இரும்பு மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்களை முறையான பிரகாரம் கையேற்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2012 | 10.5 | அமைச்சினால் பரிசு வழங்குவதற்காக 1100 அப்பியாசப் புத்தகங்களை ரூபா 110,000 இற்கு கொள்வனவு செய்யும் போது வியாபாரத் தரகினைப் பெற்றுக்கொள்வதற்கு கவனம் செலுத்தப்படாமையின் காரணமாக ரூபா 11,000 நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. |
| 2011<br>2012 | 10<br>10.6 | அமைச்சினால் குறிப்பிட்ட நோக்கமின்றி ரூபா 15,000,000 செலவில் இலங்கை மத்திய வங்கியின் ஊடாக 2000 சம்புத்தத்வ ஜயந்தி ஞாபகார்த்த நாணயக் குற்றிகள் வெளியிடப்பட்டிருந்தன. 2014 மார்ச் 31 ஆந் திகதியில் |

உள்ளவாறு அதில்ரூபா 7,882,500 பெறுமதியான 1051 நாணயக் குற்றிகள் விற்பனை செய்யப்பட்டிராததுடன், அதில் 1002 நாணயக் குற்றிகள் மத்திய வங்கியின் பொறுப்பில் இருந்தன.

## 3.12 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 11 | 5 |
| (ii) | மூன்றாம் நிலை | 2 | - | 2 |
| (iii) | இரண்டாம் நிலை | 139 | 75 | 64 |
| (iv) | ஆரம்ப நிலை | 37 | 26 | 11 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 5 | 2 | 3 |
| | **மொத்தம்** | **199** | **114** | **85** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 85 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. தலைப்பு 201 –பௌத்த சமய அலுவல்கள் திணைக்களம்

### 4.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

திணைக்களம் பின்வரும் பதிவேடுகளைப் பேணியிராமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) |
| (ஈ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) |
| (உ) | கொள்வனவுக் குழுவின் மற்றும் மதிப்பாய்வுக் குழுக்களின் வருகைப் பதிவேடு | அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 வழிகாட்டி |
| (ஊ) | கூறுவிலைக் கோரல் பதிவேடு | அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 வழிகாட்டி |

### 4.2 ஒதுக்கீட்டு கணக்கு

#### 4.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நான்கு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன்

பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 27 சதவீதத்திற்கும் 77 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் 201-2-2-1405 ஆம் செலவின விடயத்தின் செலவினம் ரூபா 29,392,924 ஆக இருந்ததுடன், திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் அது ரூபா 28,392,924 ஆகவிருந்தது. இதன் காரணமாக, ரூபா 1,000,000 வேறுபாடு நிலவியது.

## 4.3 பொது வைப்புக் கணக்கு

இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 323,277 கூட்டுத் தொகையான 5 வைப்புகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 20101 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாக சேவை விலகிய உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 42,150 தொகையான இடர்க்கடன் மீதி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.5.1 உள்ளகக் கணக்காய்வு

விகாரைகள் மற்றும் கோயில்கள் அதிகாரச்சட்டத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற விகாரைகள் மற்றும் கோயில்கள் தொடர்பில் 2014 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு பரிசோதனைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த குறைபாடுகளை நிறைவு செய்வதற்கு திணைக்களம் 2015 மே 30 ஆந் திகதியளவிலும் தவறியிருந்தது. அந்த உள்ளக கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம்,

(அ) போதியளவில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமையால் விகாரைகள் மற்றும் கோயில்களுக்குரிய சொத்துக்களை சரியாக உறுதிப்படுத்துவதற்கு முடியாது போயிருந்தது.

(ஆ) உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் நிறைவு செய்யப்பட வேண்டியமை உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததெனினும், அவை நடைமுறைப்படுத்த வேண்டிய விதம் தொடர்பில் குறிப்பான அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தில் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபையின் அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட, விற்பனை செய்ய வேண்டிய மற்றும் அப்புறப்படுத்தப்பட வேண்டிய பொருட்கள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 772 (1) இன் பிரகாரம் 2015 மே 30 ஆந் திகதியளவிலும் திணைக்களத்தினால் உகந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) தீர்க்கப்படாத பொறுப்புகள்

திணைக்களத்தில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்திற்குக் குறைவாக நிலவி வரும் தீர்க்கப்படாத ரூபா 154,806,824 பொறுப்புகள் இருந்தன.

## 4.7 செயலாற்றல்

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

-----------------------------------------------------------------------------------------

1931 இன் 19 ஆம் இலக்க விஹாரைகள் கோயில்கள் கட்டளைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் பிரதான பணியாக குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், அதிகாரச்சட்டத்தின் 43 ஆம் பிரிவிற்காக வெளியிடப்பட்டிருந்த பிரமாணங்களின் பிரகாரம் விஹாரைகள் மற்றும் கோயில்களின் வருமானத்தில் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய 7.5 சதவீத குத்தகைப் பணத்தை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**4.8 இழப்புகளும் நட்டங்களும்**

-------------------------------------

அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியைகளினது பாவனைக்கென உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற 60,000 கைத்தறிச் சேலைகளை கொள்வவு செய்ய பௌத்த விவகார ஆணையாளர் நாயகம் மற்றும் அரச நிறுவனமொன்றின் பொது முகாமையாளரொருவருக்கிடையே 2012 மே 23 ஆந் திகதி உடன்படிக்கை ஏற்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டின் கொள்வனவுத் தீர்மானமொன்றின் பிரகாரம் 60,000 தேசிய கைத்தறிப் புடவைகளை ஒன்று ரூபா 1,095 வீதம் (பெறுமதி சேர் வரி நீங்கலாக) ரூபா 65,700,000 இற்கு கொள்வனவு செய்வதற்கு மேற்படி உடன்படிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் உடன்பாடு காணப்பட்டிருந்தது. எனினும், அரச கம்பனியால் உள்நாட்டு விநியோகத்தரொருவரூடாக இந்தியாவிலிருந்து துணி இறக்குமதி செய்யப்பட்டு சேலைகள் வழங்கப்பட்டிருந்தன. திணைக்களத்தால் 60,000 சேலைகளை ஒன்று ரூபா 1,226.40 வீதப்படி ரூபா 73,584,000 சலுசல நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

இதன்போது, உள்நாட்டு வழங்குநருக்கு சேலையொன்றின் கிரயம் ரூபா 648.45 ஆன போதிலும், அரச கம்பனியால் உள்நாட்டு வழங்குநருக்கு சேலையொன்றுக்கு ரூபா 1,020 வீதம் செலுத்தப்பட்டிருந்ததால் சேலையொன்றுக்கு ரூபா 371.55 வீதம் 60,000 சேலைகளுக்காக ரூபா 22,293,000 மதிப்பிடப்பட்ட நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2013/2014 ஆம் ஆண்டுகளுக்காக 40,000 உள்நாட்டு கைத்தறிச் சேலைகளை விநியோகிப்பதற்கான கட்டளையொன்று அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கான ஒப்பந்தத்தின் 06 ஆம் பந்தி மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு அறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற சேலையொன்றுக்காக மாத்திரம் ரூபா 1,400 வீதம் (வரி நீங்கலாக) 40,000 சேலைகளுக்காக ரூபா 56,000,000 செலுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருக்கையில் இறக்குமதி செய்யப்பட்ட சேலைகளுக்காக அரச கம்பனிக்கு ரூபா 39,767,000 செலுத்தப்பட்டிருந்தது.

இந்த கட்டளைகளின் பொருட்டு சேலைகளை வழங்குவதற்காக உள்நாட்டு இறக்குமதியாளர் ஊடாக சேலைக்கான புடவையைப் பெற்றுக்கொள்ளும் போது, அரச கம்பனியால் சேலைகளாக துண்டாக்கப்பட்ட கட்டளைக்காக குறித்த சேலைகள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த வழங்கலுக்குரிய பௌத்த விவகாரத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழுவின் 2014 ஏப்ரல் 01 ஆம் திகதிய அறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம், இறக்குமதி செய்யப்பட்ட புடவைகளில் சேலை விநியோகம் மேற்கொள்ளப்படுமாயின் உச்ச விலையாக ரூபா 1,000 குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், அரச கம்பனியால் உள்நாட்டு வழங்குனருக்கு இறக்குமதி செய்யப்பட்ட புடவைகளில் உற்பத்தி செய்யப்படும் சேலையொன்றுக்காக ரூபா 1,305 வீதம் செலுத்தப்பட்டிருந்ததுடன், ஒரு சேலை ரூபா 305 வீதம் 25,500 சேலைகளுக்கு ரூபா 7,777,500 மதிப்பிடப்பட்ட நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 4.9 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) தஹாம் சரசவிய மூன்றாவது கட்டம் - 2013

தஹாம் சரசவிய மூன்றாவது கட்டத்திற்காக பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்திற்கு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ரூபா 2,116,584 செலுத்தப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் கீழ்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) தஹாம் சரசவிய மூன்றாவது கட்டத்தின் கீழ் பௌத்த தர்ம டிப்ளோமா பாடநெறி முறையான உடன்படிக்கையொன்றில்லாமல் பாளி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான மதிப்பிடப்பட்ட மாணவர் எண்ணிக்கை 2,500 ஆக இருந்த போதிலும் உண்மையாக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 1,556 ஆனமையால், ஒதுக்கீட்டின்போது உண்மையான மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பாடநெறிகளுக்குரிய கருத்தரங்குகளை நடாத்தாது ரூபா 105,000 செலவிடப்பட்டு 200 நிபண்டன நூல்கள் அச்சிடப்பட்டு மாணவரிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இந்த நிபண்டன நூல்களின் கிரயத்தினை மாணவர்களிடம் அறவிடுவதற்கோ அல்லது எதிர்காலத்தில் பாடநெறியினை தொடரும் மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடிய வகையில் மீளப் பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தமிழ் மொழி மூல அறநெறிப் பாடசாலைப் புத்தகங்களை அச்சிடல்**

---

தமிழ் மொழி மூல அறநெறிப் பாடசாலைப் புத்தகங்களை அச்சிடல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 1 ஆம் தரத்திற்குரிய தமிழ் மொழிமூல புத்தகத்தின் முதலாவது அச்சிடலின் 1,000 பிரதிகளில் 950 பிரதிகளை பகிர்ந்தளிப்பதற்கு 4 வருட காலம் கடந்திருந்தது. மீண்டும் தரம் 1 இன் 2000 தமிழ் புத்தகங்கள் ரூபா 86,000 செலவில் அச்சிடப்பட்டிருந்ததெனினும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அந்தப் புத்தகங்கள் பகிர்ந்தளிக்கப்படாமல் ரூபா 86,860 பெறுமதியான 2,020 தமிழ் மொழி மூலப் புத்தகங்கள் மீதியாக இருந்தன.

(ii) முறையான விலை மதிப்பீடொன்றினைப் பெற்றுக்கொள்ளாமல் பௌத்த அறநெறிப் பாடசாலையின் 2 மற்றும் 3 ஆம் தரங்களிற்கான 2,000 புத்தகங்களை அச்சிட்டு 2013 செப்தம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் வேயாங்கொடையிலுள்ள அறநெறிப்பாடசாலை களஞ்சியத்தில் கையளிக்குமாறு அரச அச்சகத் தலைவருக்கு 2013 யூன் 05 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. கட்டளை வழங்கப்பட்டு 2 வருடங்கள்

கடந்திருந்த போதிலும், அந்தப் பிரசுரங்களுக்கு உரிய எந்தவொரு பிரதியும் களஞ்சியத்திற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் கையளிக்கப்பட்டிராமையால், தரம் 1 இன் தமிழ் மொழிமூலம் கல்விகற்ற மாணவர்களுக்கு அதற்கடுத்த தரத்திற்கான தமிழ் மொழிமூலப் புத்தகங்களை வழங்க முடியாதிருந்தது.

## 4.10 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 09 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 778 | 651 | 127 |
| (iv) | ஆரம்ப நிலை | 36 | 27 | 9 |
| | **மொத்தம்** | **827** | **690** | **137** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 137 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 5. தலைப்பு 202 –முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்

## 5.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் |
| (இ) | ஆளுக்குரிய வேதனப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 453 |
| (ஈ) | பெறப்படும் காசோலைகள், காசுக்கட்டளைகள் போன்றவற்றுக்கான பதிவேடு | நிதிப் பிரமாணம் 451 |
| (உ) | ஊத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 845 (1) |
| (ஊ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454 (2) |
| (எ) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891 (1) |
| (ஏ) | அடியிதல்சேர் புத்தகங்கள் | நிதிப் பிரமாணம் 341 |
| (ஐ) | வாகனங்களைப் பட்டியல்படுத்தும் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647 (உ) |
| (ஒ) | விலைமனுக் கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 வழிகாட்டி |

**5.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்காமை**

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டில் சமர்பிக்கப்பட்ட 6 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் வரையிலும் பதில் சமர்ப்பிக்கப்படாததுடன், அந்த ஐயவினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 1,644,593 ஆக இருந்தது.

**5.3 ஒதுக்கீட்டு கணக்கு**

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு செய்யப்பட்டமையால் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 27 சதவீதத்திற்கும் 92 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை கலாசார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 190,430,318 மூலதனச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும், நிலையான சொத்துக்கள் அசைவு அறிக்கையில் கட்டிடங்களின் ஆரம்ப மீதியாக அந்த செலவினம் முன்கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆண்டின்போது 2 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 230,500 கூட்டுத் தொகையான மீண்டெழும் செலவினம் மூலதனச் செலவின விடயங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

**5.4 பொது வைப்புக் கணக்கு**

இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 7,759,116 கூட்டுத் தொகையான 7 வைப்புகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

விடய இலக்கம் 20201, அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 475,319 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகள் 1 முதல் 21 வருடங்களாக உள்ளபோதிலும், அந்த நிலுவைக்கடன் மீதிகளை அறவிடுவதற்குத் திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திறைசேரியின் கணனி அச்சுப் பதிவுகளின் பிரகாரம் சம்பளக்கடன் மற்றும் முற்பணமாக ரூபா 1,772,545 செலுத்தப்பட்டிருந்ததுடன், திணைக்களத்தின் அங்கத்துவக் கடன் பதிவேடு மற்றும் கடன் பேரேட்டின் பிரகாரம் அது ரூபா 1,717,545 ஆக இருந்தது. அதன் பிரகாரம், திறைசேரிக் கணனி அச்சு மற்றும் திணைக்களத்தின் புத்தகங்களுக்கிடையே ரூபா 55,000 வேறுபாடு நிலவியது.

(இ) திணைக்களத்தின் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் செலுத்திய விழா முற்பணத் தொகையின் பெறுமதி ரூபா 243,500 ஆக இருந்ததுடன், திணைக்களத்தின் அங்கத்துவக் கடன் பதிவேடு மற்றும் முற்பணப் பதிவேடுகளின் பிரகாரம் அந்தப் பெறுமதி ரூபா 180,000 ஆனமையால் ரூபா 63,500 வேறுபாடு நிலவியது.

## 5.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 5.6.1 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.6.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பில் நிதிப் பிரமாணம் 772 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

திணைக்களத்தில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்திற்குக் குறைவாக இருந்துவரும் பொறுப்புகள் ரூபா 6,639,556 ஆகும்.

**5.8 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | |
| XXII ஆம் அத்தியாயத்தின் 23.18 ஆம் பிரிவு | 196,288 | வெளிநாடு சென்ற உத்தியோகத்தரொருவரின் வெளிநாடு செல்வதற்கான விடுமுறை தொடர்பான தகவல்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்படவில்லை. |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக்கோவை**

---

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 1646 | - | திணைக்களத்தின் 04 குழாம் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

**(இ) அரச நிதிச் சுற்றறிக்கை**

---

2006 திசெம்பர் 26 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின்

| | | |
|---|---|---|
| 3 ஆம் பகுதி | | திணைக்களத்தில் நடைமுறைப்படுத்தப்படும் 2 நிதியங்களின் வங்கிக் கணக்குகள் தொடர்பில் காலாண்டு ரீதியான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு 2015 மே 30 ஆந் திகதியளவிலும் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 4 ஆம் பகுதி | - | திணைக்களத்தில் நடைமுறைப்படுத்தப்படும் ஹஜ் நிதியம் மற்றும் முஸ்லிம் புண்ணிய ஆதார நிதியத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 5.9 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலான குறைபாடுகள்

---

### (அ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிப்பதிலான நீண்டகால தாமதம்

---

முஸ்லிம் புண்ணியாதார நிதியத்தின் வங்கி நடைமுறைக் கணக்கிற்காக 2014 ஏப்ரல் மாதத்தின் பின்னர் 2015 ஆம் ஆண்டின் மே மாதம் வரை வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) சீராக்கப்பட வேண்டிய மீதி

---

முஸ்லிம் சமய மற்றும் கலாசார திணைக்களத்தினால் 2014 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்பட்ட சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புகள் பின்வருமாறு

இரண்டு வங்கி நடைமுறை கணக்குகளுக்காக 2014 திசெம்பர் மாதத்திற்கென தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் வழங்கப்பட்டு வங்கிகளுக்குச் சமர்பிக்கப்படாத, 06 மாதங்களைக் கடந்திருந்த முறையே ரூபா 1,275,325 மற்றும் ரூபா 300,000 எனுமாறு ரூபா 1,575,325 கூட்டுப் பெறுமதியுடைய 185 காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 396 (இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.10 முறையற்றக் கொடுக்கல் வாங்கல்கள்

---

### அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

சவூதி அரேபியாவிற்கு செல்கின்ற முஸ்லிம் இனத்தவருக்கு, முஸ்லிம் இனத்தவர் என்பதை உறுதிப்படுத்தி திணைக்களத்தால் வெளியிடப்படுகின்ற சான்றிதழுக்கு ரூபா 200 கட்டணமாக அறவிடப்பட்டிருந்தது. 2014 மே 12 ஆந் திகதிய PFD/RED/10/03/2014/ 01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் அந்த வருமானம் 20.03.99.00 கொண்ட வருமானக் குறியீட்டின் கீழ் அரசிறைக்கு செலவு வைக்க பொருத்தமானதென பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. திணைக்களம் அப்பரிந்துரைக்கு முரணாக 2014 யூன் மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரை பெற்றிருந்த ரூபா 738,000 கூட்டுத் தொகையான வருமானத்தை முறையற்ற விதத்தில் முஸ்லிம் புண்ணிய ஆதார நிதியத்தில் செலவு வைத்திருந்தது.

## 5.11 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) முஸ்லிம் புண்ணிய ஆதார நிதியம்

--------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முஸ்லிம் சமய அலுவல்கள் பணிப்பாளர் உள்ளடங்களாக வகுப் சபையின் 07 அங்கத்தவர்காளால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், முஸ்லிம் புண்ணிய ஆதார நிதியத்திற்கு ரூபா 10,362,256 தொகையான வருமானத்தை சேகரித்தல் மற்றும் நிதியத்தினால் ரூபா 9,611,915 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும், இது தொடர்பில் குறிப்பானதொரு கொள்கை மற்றும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளடங்களாக 6 பேரினைக் கொண்ட பதவியணியொன்றினால் நிதியத்தின் நிர்வாக பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், உரிய முறையில் கடமைக் கையளிப்பு இடம்பெற்றிருக்கவில்லை. நிதியத்தின் கடமைகளை நிறைவேற்றிய 3 நிரந்தர திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு முறையான அங்கீகாரமின்றி 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 59,250 படியாக வழங்கப்பட்டிருந்தது.

(iii) திணைக்களத்தின் பணிப்பாளர், கணக்காளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் இருக்கையில், நிதியத்தின் வருமான சேகரிப்பு, செலவிடல் மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்காக முறையான அங்கீகாரமின்றியும் உரிய முறையில் கடமை கையளிப்படாதும் மூன்று வெளிவாரி ஊழியர்களை ஈடுபடுத்தி மாதாந்த படியாக ரூபா 38,000 கூட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) வகுப் அதிகாரச்சட்டத்தின் 43(8) ஆம் பிரிவின் பிரகாரம் புத்தகங்களை முறையாகப் பேணுதல் மற்றும் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஹஜ் நிதியம்**

------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டில் ஹஜ் யாத்திரிகர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்ற திணைக்களத்தின் 5 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 350,000 கூட்டுத் தொகையான ஊக்குவிப்புக் கொடுப்பனவும், திணைக்களத்தின் நிரந்தர சேவையிலுள்ள இருவருக்கு நேர்முக பரீட்சைப் படியாக ரூபா 44,500 என்பன முறையான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தன.

(ii) ஹஜ் நிதியத்திற்காக முறையான கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.12 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 3 | 3 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | - | 4 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 91 | 52 | 39 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 16 | 18 | - | 2 |
| | **மொத்தம்** | **117** | **73** | **46** | **2** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 46 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) இரண்டு மிகை ஊழியர்களுக்காக முறையான அங்கீகாரத்தை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், அந்த மிகை ஊழியர்களுக்காக 2014 ஆம் ஆண்டின் இறுதி 2 மாதங்களுக்காக ரூபா 111,843 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது.

## 6. தலைப்பு 203 – கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்

---

### 6.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

---

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| உத்தியோகபூர்வத் தொலைபேசிப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 845(1) |
| மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) |

### 6.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளிக்காமை

---

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2015 யூன் 30 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்படாததுடன், அந்த

ஐய வினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 13,320,360 ஆக இருந்தது.

## 6.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நான்கு செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 286,000 தொகையான மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பதின்மூன்று செலவின விடயங்களுக்கு மிகையான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 11 சதவீதத்திற்கும் 77 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) ஒதுக்கீட்டு கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதி ரூபா 15,937 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) திணைக்களத்தினால் நிதிப் பிரமாணம் 94(1) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக 4 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு ரூபா 1,787,371 இனால் விஞ்சி பொறுப்புகள் ஏற்கப்பட்டிருந்தன.

## 6.4 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

விடய இலக்கம் 20301, அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த 12 வருடங்களுக்கு மேற்பட்ட

காலமாக நிலவி வரும் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 46,178 ஆக இருந்ததுடன், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்குத் திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் 2006 ஆம் ஆண்டிலிருந்து முன் கொண்டுவரப்படுகின்ற ரூபா 3,000 தொகையான இனங்காணப்படாத மீதியினைத் தீர்ப்பதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 6.5.1 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் கணக்கு பிரிவு, அபிவிருத்திப் பிரிவு மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவுகளுக்குரிய 52 விடயங்களின் கீழ் உள்ளகக் கணக்காய்வு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 03 விடயங்கள் தொடர்பில் மாத்திரம் உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றுள்ளமையால் போதியளவான உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

### 6.5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

திணைக்களத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 6.6 இணங்காமை

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை** | | |
| (i) XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.3 ஆம் பிரிவு மற்றும் 23 ஆம் பிரிவு | | கடன் முற்பணங்களை வழங்கும் போது ஓய்வூதிய மாற்றத்திற்காக வழங்கப்படுகின்ற இரத்துச்செய்ய முடியாத உறுதியுரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) XXIV ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பிரிவு | | கடன் விண்ணப்பத்தின் உண்மைத்தன்மை மற்றும் உத்தியோகத்தர்களின் கட்டுப்பாட்டு விடயங்களை மீறிய காரணங்களால் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டதாக உறுதிப்படுத்த விண்ணப்பதாரியால் நேர்மையுடன் செய்யப்படும் வெளியீடொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அந்த வெளியீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப் பிரமாணம் 751 (1), 454 மற்றும் 763 | 15,940,600 | சீருடை மற்றும் சீருடைத் துணியினது பெறுவனவு இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 752 | - | இருப்புப் பதிவேட்டின் அனைத்துப் பதிவுகளும் இருப்புப் பதிவேட்டு உறுதிச்சீட்டொன்றின் மூலம் உறுதி செய்யப்பட வேண்டுமெனினும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) நிதிப் பிரமாணம் 753 (1) மற்றும் (2) | - | பொருள் வழங்கல் கட்டளை புத்தகம் மற்றும் பொருள் பெறுவனவுக் கட்டளைப் புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப் பிரமாணம் 264 | 880,000 | பதினொரு சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 880,000 கூட்டுத்தொகையான செலவினங்கள் தொடர்பில் பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை** | | |
| 2 மற்றும் 8.12.3 ஆம் வழிகாட்டி | 15,940,600 | 2014 ஆம் ஆண்டிற்கான பௌத்த அறநெறிப்பாடசாலைகளின் ஆசிரியைகளுக்காக சேலைகளைக் கொள்வனவு செய்யும் போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டி பின்பற்றப்பட்டிராததுடன், கிடைத்த பொருட்கள் தொடர்பில் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தரின் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**6.7 செயலாற்றல்**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

-----------------------------------------------------------------------------------------

திணைக்களம் பிரதான பணிகளை போதியளவில் நிறைவேற்றாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) கிறிஸ்தவ சமய கலாசார கலை மற்றும் சாகித்திய நடவடிக்கைகளை மேம்படுத்தலின் கீழ் தேசிய கிறிஸ்தவ சாகித்ய விழாவிற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 1,759,000 நிதியேற்பாட்டில் 77 சதவீதம்எஞ்சியிருந்தது

(ii) தேசிய கிறிஸ்தவ சாகித்ய விழாவிற்காக குறுநாடக செயலமர்வொன்றினை நடாத்துவதற்கான விண்ணப்பங்களை கோரும் போது, விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை கவனத்திற்கொள்ளாமல் அந்த திகதிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பமொன்றிற்கு ரூபா 135,000 செலுத்தப்பட்டிருந்தது.

**6.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------------------

அறநெறிப்பாடசாலைகளின் ஆசிரியைகளுக்காக 11,985 சேலைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன்,7,829 சேலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தமை மற்றும் கையிருப்பில் 120 சேலைகள் மாத்திரம் இருந்தமையால் ரூபா 4,439,600 பெறுமதியான 4,036 சேலைகளின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது.

**6.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேவைப்பாட்டினை விஞ்சி அறநெறிப் பாடசாலை ஆசிரியைகளுக்காக ரூபா 138,600 செலவில் 126 சேலைகள் மேலதிகமாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவில்லையெனினும், சீருடைகளைப் பொதி செய்வதற்காக ரூபா 48,230 பொதியிடல் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 6.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 02 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 00 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 56 | 33 | 23 |
| (iv) | ஆரம்ப நிலை | 07 | 04 | 03 |
| | மொத்தம் | 67 | 39 | 28 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 28 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) திணைக்களத்தின் கணக்காளர் பதவி 2012 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக நிலவியதுடன், 2015 சனவரி முதல் ஆகஸ்ட் வரையிலும் அந்த பதவிக்கு பதிற் கடமை உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. தலைப்பு 204 –இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

---

### 7.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

---

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி |
| குழுக் கூட்ட அறிக்கை | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.11.3 ஆம் வழிகாட்டி |

### 7.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லா சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் ஆண்டினுள்ளான சேர்த்தல்கள் டி.ஜீ.எஸ்.ஏ 04 மாதிரியின் பெறுமதிகளுக்கு சமனாக இருக்க வேண்டுமெனினும், அதன் வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதி ரூபா 499,702 இனால் அதிகரித்தும், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா 499,702 இனால் குறைத்தும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்கென கொடுப்பனவு செய்யப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்குறிய ரூபா 70,415 தொகையான பொறுப்புகள் DGSA 8(1) பொறுப்புகள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**7.3 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

விடய இல. 20401, அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த 1 முதல் 22 வருடங்களாக நிலவி வரும் ரூபா 186,930 நிலுவைக் கடன் மீதியினை அறவிடுவதற்குத் திணைக்களம் தவறியிருந்தது.

**7.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**7.4.1 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாததுடன், அதற்காக திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள பெண் உத்தியோகத்தரொருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். மீளாய்வாண்டில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

**7.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

திணைக்களத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**7.5 செயலாற்றல்**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுத்திராமை அவதானிக்கப்பட்டது.

**அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைக் கொள்வனவு**

முன்னூற்று எழுபது அறநெறி பாடசாலைகளுக்கு சீருடைகள் வழங்குவதற்கு 2014 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 10,000,000 தொகையான நிதியேற்பாடு

மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதன் பற்றாக்குறையால் நிதிப் பிராமாணம் 66 இன் கீழ் ரூபா 1,500,000 தொகையான நிதியேற்பாடுகள் ஏனைய செலவின விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம்,ரூபா 11,500,000 தொகையான நிதியேற்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தது. திணைக்களத்தின் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் 311 அறநெறிப் பாடசாலைகளுக்கு சீருடைத் துணிகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 11,487,000 செலவிடப்பட்டிருந்தமையால் இலக்கிடப்பட்ட 59 அறநெறிப் பாடசாலைகளுக்கு சீருடைகளை வழங்க முடியாது போயிருந்தது.

## 7.6 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலான குறைபாடுகள்

---

### சீராக்கப்பட வேண்டிய மீதிகள்

---

2014 திசெம்பர் மாதத்திற்கென திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாத காலத்தைக் கடந்திருந்த ரூபா 141,843 கூட்டுத் தொகையான 04 காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 396 (இ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றிருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பம் பின்வருமாறு.

### கதிர்காமம் சுற்றுலா விடுதியின் நிர்மாண நடவடிக்கைகள்

---

கதிர்காமத்தில் நிர்மாணிக்கப்பட்ட சுற்றுலா விடுதியின் சாப்பாட்டு அறையை படுக்கை அறையாக மாற்றியமைத்தல் மற்றும் குளியலறையை நிர்மாணிப்பதற்கு அந்தக் கட்டிடத்தை நிர்மாணித்த ஒப்பந்தகாரர்களிடம் பெறப்பட்ட ரூபா 666,798 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் அவர்களுக்கே அப்பணி கையளிக்கப்பட்டிருந்தமை தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மேற் குறித்த நிர்மாணத்திற்கு மூல அளவிடைப் பட்டியல் மற்றும் கிரய மதிப்பீடு திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிராததுடன், கொள்வனவுக் குழுவின்

அங்கீகாரமின்றியும் ஒப்பந்த உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக்கொள்ளாமலும் மேற்படி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேலும் ஒப்பந்தத்திற்குரிய கோவையொன்று அலுவலகத்தில் காணப்படவில்லை.

(இ) ஒப்பந்ததாரர் இந்த செயலை நிறைவேற்றாதிருக்கையில் ஒப்பந்ததாரருக்குக் கொடுப்பனவு மேற்கொள்ள இயலக்கூடிய வகையில் ரூபா 624,967 கூட்டுப் பெறுமதியுடைய 4 காசோலைகள் ஒப்பந்தக் கம்பனியின் பெயரில் ஆண்டின் இறுதியில் வரையப்பட்டிருந்தன. காசோலைகளை எழுதி முடிக்கும் போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் நிதிப்பிரமாணம் 136,137,138 மற்றும் 139 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், உரிய சேவை உரிய முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டுமெனினும், நிறைவேற்றப்படாத சேவைகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்வதற்காக காசோலைகள் வரையப்பட்டிருந்தமை கணக்காய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்டதையடுத்து பின்னர் அந்தத் தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 7.8 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) நூலக நிர்வாகம்

2007 ஆம் ஆண்டில் இடம்பெற்ற நூலகப் புத்தகங்கள் தொடர்பான ஆய்வின் போது நூலகத்திற்குரிய 350 நூல்கள் நூலகத்தில் இல்லாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததெனினும், நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் காணாமற்போன புத்தகங்கள் தொடர்பில் முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வாகனப் பரிசோதனை

2013 ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 49,260 செலவிடப்பட்டு பழுதுபார்க்கப்பட்ட கெப் வண்டியொன்று 2013 செப்தம்பர் மாதத்தில் ஓட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருந்ததெனினும், 2015 யூன் 30 ஆந் திகதியளவிலும் அதனைக்

கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் திணைக்கள வளவில் அது சேதமுற்றவாறிருந்தது.

## 7.9 மனிதவள முகாமைத்துவம்

### 7.9.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 05 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 157 | 114 | 43 |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 17 | 07 |
| | **மொத்தம்** | **188** | **136** | **52** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியளவில் 46 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2013 செப்தம்பர் 12 ஆந் திகதி முதல் நிருவாக உத்தியோகத்தர் பதவியில் நிலவும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஒப்பந்த அடிப்படையில் மாதாந்தம் ரூபா 23,506 தொகையான படியொன்றினை செலுத்தும் அடிப்படையில் உத்தியோகத்தரொருவர் 2013 செப்தம்பர் 12 ஆந் திகதி இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார்.

## 8. தலைப்பு 205 – பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்திணைக்களம்

### 8.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| **பதிவேட்டு வகை** | **உரிய பிரமாணம்** |
|---|---|
| நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| வாகனப் பட்டியல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647 (உ) |

### 8.2 கணக்காய்வுச் சான்றுகளின்மை

பற்றுச்சீட்டுக்கள், நிலையான வைப்புச் சான்றிதழ்கள் போன்ற தேவையான சான்றுகள் திணைக்களத்தில் இல்லாதிருந்தமையால்,ரூபா 16,669,375 கூட்டுத் தொகைக்குரிய 03 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 8.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்

மூன்று செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 20 சதவீதத்திற்கும் 71 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**8.4 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

விடய இல. 20501, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 657,194 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் வருடமொன்றிற்கு குறைவான காலப்பகுதிக்குரியனவாகும். அந்நிலுவை மீதிகளை அறவீடுசெய்வதற்குத் திணைக்களம் தவறியிருந்தது.

**8.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**8.5.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்படாததுடன், அது நிதியாண்டு நிறைவடைந்து 2015 மே 26 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது.

**8.5.2. உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்று தாபிக்கப்பட்டிருந்ததெனினும், நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் பூதல்கள் தொடர்பில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**8.5.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தில் சொத்துக்கள் தொடர்பில் நடாத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் திணைக்களத்திற்குரிய ஜீப் வண்டியொன்று பயன்படுத்தப்படாது ஏறக்குறைய 03 ஆண்டுகளாக செயற்பாடற்று திணைக்களத்தின் வளாகத்தில் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது.

**8.6 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** |
|---|---|---|
| | **ரூபா** | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | |
| (i) நிதிப் பிரமாணம் 264 | 159,625 | பதினான்கு சந்தர்ப்பங்களில் பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 159,625 கூட்டுத் தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும், அந்த கொடுப்பனவு செலுத்தப்பட்டதற்கான தரப்பினரிடமிருந்து பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 454 மற்றும் 751 | 50,100 | ஐந்து சந்தரப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 50,100 கூட்டுத் தொகையான பொருட்கள், நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 752 | - | இருப்புப் பதிவேட்டில் அனைத்துப் பதிவுகளும் கொடுப்பனவு உறுதிச்சீட்டொன்றின் மூலம் சான்றுபடுத்தப்பட வேண்டுமெனினும், கொடுப்பனவு உறுதிச் சீட்டு இலக்கங்கள் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | நிதிப் பிரமாணம் 1641 | - | திணைக்களத்தின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் சொந்தமான 02 வாகனங்கள் அதன் உரிமையாளர்களுக்குக் கையளிக்கப்படும் வரை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளப்படாமல், பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. |

**(ஆ) பொது நிருவாகச் சுற்றறிக்கை**

--------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 14/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின்02 ஆம் பந்தி | - | திணைக்களத்திற்குரிய 11 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் நுகர்வு தொடர்பான பரிசோதனை 2014 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| | 3.14 ஆம் பந்தி | - | கொழும்பிலுள்ள வாகனங்கள் தொடர்பில் கொழும்பு, தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லையிலும் கோட்டே நகரசபை எல்லையிலும் அமைந்துள்ள கராஜ்களில் கூறுவிலைகள் கோரப்பட்டு வாகன பழுதுபார்த்தலில் சிறப்புத் தேர்ச்சியுடைய கராஜ் தெரிவு செய்யப்பட்டு, அவற்றின் பெயர் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு, பழுதுபார்த்தல்களுக்காக கேள்வி கோரப்பட வேண்டுமெனினும், திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களைப் பழுது பார்க்கும்போது கடவத்தை மற்றும் வேயான்கொடையில் அமைந்துள்ள கராஜ்களில் கூறுவிலைகள் கோரப்பட்டு பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 8.7 செயலாற்றல்

----------------------

2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதீப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

### (அ) சமய மற்றும் சமூக சேவைகள் பொது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலம் செலவினங்களைச் செய்தல்

-------------------------------------------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தினால் ரூபா 10 மில்லியன் ஆரம்ப முதலீட்டைச் செய்து சமய மற்றும் சமூக சேவைகளுக்கு பொது நம்பிக்கைப் பொறுப்பின் பெயரில் நம்பிக்கைப் பொறுப்பு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டு தொடங்கும் போது இந்த நம்பிக்கைப் பொறுப்பிற்குரிய வங்கிக் கணக்கில் காணப்பட்டரூபா 81,606,870 வரவு மீதி தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படாமல், ஏனைய நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் மற்றும் பூதல்களுக்குரிய பணமும், உரிமை கோரப்படாத வெளிநாட்டு இழப்பீட்டுப் பணமும், கோவில் இழப்பீடாகக் கிடைத்த பணமும் ஈடுபடுத்தப்பட்டு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 33,875,136 இந்த நம்பிக்கைப் பொறுப்பின் பெயரில் செலவிடப்பட்டிருந்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) சாதாரண நிர்வாக நடவடிக்கைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செலவின விடயங்களுக்கு மிகைச் செலவினம் அறிக்கையிடப்படாதவாறு நிதியேற்பாட்டினை விஞ்சி மேற்கொள்ளப்பட்டிருந்த சமய மற்றும் சமூக சேவைகள் பொது நம்பிக்கை நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் 6 செலவின விடயங்களுக்கான ரூபா 1,571,848 மிகைச் செலவினம் இந்த நிதியத்திலிருந்து ஈடுசெய்யப்பட்டிருந்தது.

(ii) 2014 ஆம் ஆண்டின் தொடக்கத்தில நம்பிக்கைப் பொறுப்பில் இருந்த ரூபா 81,606,870 வரவு மீதி தொடர்பில் கவனத்திற்கொள்ளாது மீளாய்வாண்டில் 7 செலவின விடயங்களுக்குரிய ரூபா 31,969,288 நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(iii) பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்குரிய நம்பிக்கைப் பொறுப்பு பூதலுக்குரிய வெளிநாடுகளிலுள்ள சொத்துக்கள் தொடர்பில் உரித்துறுதிகளை கையொப்பமிடுவதற்கு விமானப் பயணச்சீட்டினைப்

பெற்றுக்கொள்வதற்கான செலவினம் உரிய நம்பிக்கைப் பொறுப்பு கணக்குகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனினும், சமய மற்றும் சமூக சேவைகள் பொது நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து இரு சந்தர்ப்பங்களில் விமானப் பயணச்சீட்டுகளுக்காக ரூபா 316,000 செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) போதியளவு நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் 1019 நம்பிக்கைப் பொறுப்புகள் மற்றும் 130 பூதல்கல் ஆகியவற்றினது நோக்கங்களைப் போதியளவு நிறைவேற்றுவதற்குத் திணைக்களம் தவறியிருந்தது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

**(அ) வீரசிங்க அபேநாயக்க பூதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இறுதி விருப்புப் பத்திரத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு 1982 மார்ச் 30 ஆந் திகதிய அற்றோனி அதிகாரப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததெனினும், இது தொடர்பில் நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியொன்றினைத் தயாரிப்பதற்கு 28 வருட காலம் கடந்திருந்தது.

(ii) பூதல் உரிமையாளர்களின் இறுதி விருப்புப் பத்திரத்தின் பிரகாரம் பூதலுக்கு கிடைக்கும் வருமானத்தினை பயன்படுத்தி நிதியமொன்றினை ஆரம்பித்து நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். பூதலின் அசையாச் சொத்துக்களின் விற்பனை மூலம் கிடைக்கப்பெறுகின்ற பணம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் இந்த நம்பிக்கைப் பொறுப்பின் பெயரில் வைப்புச் செய்யப்பட வேண்டுமென விளக்கமளித்து மாத்தறை களஞ்சிய வீதியின் புங்சி பதஹே தோட்டத்தின் B எழுத்தினைக் கொண்ட காணித்துண்டிலிருந்து பிரித்த இலக்கம் 6 கொண்ட 35 பேர்ச் பரப்பளவான காணியினை விற்று ரூபா 2,500,000 தொகையான பணம், வீரசிங்ஹ அபேநாயக்க எனும் பெயரில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு அந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(iii) மாத்தறை களஞ்சிய வீதியின் புங்சி பதஹே தோட்டத்தின் B எழுத்தினைக் கொண்ட காணித்துண்டில் பிரித்த இலக்க 3 கொண்ட 32 பேர்ச் பரப்பளவுடைய பெரியளவிலான காணி மற்றும் அந்தக் காணியில் அமைந்துள்ள கட்டிடம் என்பன இதற்கு முன்னர் குத்தகையாளருக்கு ரூபா 360 தொகையான மாதாந்த வாடகைக்கு குத்தகைக்கு வழங்கியமை தொடர்பில் எதுவித சான்றும் இல்லாதிருந்ததுடன், பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் தனது கடமையினை உரிய முறையில் நிறைவேற்றாமையின் அடிப்படையில் அவரால் இந்த ஆதனங்கள்ரூபா 8,000 மாதாந்த வாடகைக்கு இடை குத்தகைக்கு விடப்பட்டு வருமானம் ஈட்டப்பட்டிருந்தது.

(iv) குத்தகை எடுத்தவர் இந்த சொத்துக்களுக்காக 2012 யூன் 15 ஆந் திகதிய 32 ஆம் இலக்க சட்டரீதியற்ற உரித்துறுதிக் கூற்றொன்றையும், 2012 யூன் 27 ஆந் திகதிய 34 ஆம் இலக்க சட்டரீதியற்ற வெகுமதி உரித்துறுதியொன்றையும் தயாரித்து மாத்தறை காணிகளை பதிவு செய்யும் அலுவலகத்தில் அவற்றைப் பதிவு செய்யப்பட்டிருந்தமை தொடர்பில் திணைக்களத்தால் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தால் இந்த சொத்துக்கள் 2013 பெப்ரவரி 05 ஆம் திகதிய 312 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையில் மாதாந்தம் ரூபா 8,000 வீதம் மீள குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததெனினும், மாதாந்தம் குத்தகை வாடகை தொடர்பில் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) மேற்படி குத்தகை உடன்படிக்கை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி நிறைவடைந்திருந்ததெனினும், கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 10 ஆந் திகதியளவிலும் உடன்படிக்கையினைப் புதுப்பிப்பதற்கோ அல்லது புதிய ஒப்பந்தமொன்றினைக கைச்சாத்திடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 மார்ச் மாதம் முதல் கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 10 ஆந் திகதி வரை குத்தகையாளரால் செலுத்தப்படாது நிலுவையாக இருந்த ரூபா 88,000 குத்தகையினை அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vii) மேற்படி பூதலுக்குரிய மோதரமுனேயாய தோட்டத்தின் 31.0287 ஹெக்டேயாரினை அரசு கையேற்றமைக்காக கிடைத்த ரூபா 16,500,000 தொகையான நட்ட ஈட்டுத் தொகை போதாமையின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டதன் பின்னர் பெற்றுக்கொண்ட மேற் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மோதரமுனேயாய தோட்டத்தின் கணக்கில் செலவு வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(viii) மோதரமுனேயாய தோட்டத்தின் அரசு கையேற்காத 0.1837 ஹெக்டேயர் அல்லது 72 பேர்ச் பரப்பளவான காணித்துண்டு தொடர்பில் எதுவித பதிவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ix) மேற் குறிப்பிட்ட விடயங்களின் பிரகாரம் பூதல் உரிமையாளர்களின் 1956 மே 09 ஆந் திகதிய 19047 ஆம் இலக்க இறுதி விருப்புப் பத்திரம் மற்றும் நன்நடத்தைநற்சாட்சி பத்திரம் என்பவற்றின் பிரகாரம் 1982 மார்ச் 03 ஆந் திகதிய அற்றோனி அதிகாரப் பத்திரத்தின் பிரகாரம் அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றுவதற்கு கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் தவறியிருந்தது.

**(ஆ) பூதல் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புகளிலான பற்றாக்குறை**

2013 ஆம் ஆண்டில் பூதல் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புகளில் ரூபா 296,023 கூட்டுத் தொகையான பற்றாக்குறை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பூதல் / நம்பிக்கைப் பொறுப்பின் பெயர் | | 2013 ஆம் ஆண்டு வருமானம் | செலவினம் | செலவினத்தின் தன்மை | பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|
| | ( இ ) ே | ரூபா | ரூபா | | ரூபா |
| ஹீனடிய பள்ளியகே சீலவதீ த சில்வா பூதல் | ந ா க . | 16,088 | 32,400 | நோக்கங்களை நிறைவேற்றல் மற்றும் ஏனைய செலவினங்களாக | 16,312 |
| ரீ ரீ த சில்வா பூதல் | க ( இ ) | 567,999 | 656,352 | நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்களை நிறைவேற்றல் மற்றும் பொது நம்பிக்கைப் பொறுப்புக் கட்டணம் | 88,353 |
| அமரதேவ மன்ற நம்பிக்கைப் பொறுப்பு | ( | 43,240 | 234,598 | நோக்கங்களை நிறைவேற்றுதலும் நம்பிக்கைப் பொறுப்பாளரின் கட்டணமும் | 191,358 |
| **மொத்தம்** | இ ) ே | | | | **296,023** |

## (இ) நோக்கங்களை நிறைவேற்றவதற்கான நடவடிக்கைகளை எடுக்காமை

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| பூதல் / நம்பிக்கைப் பொறுப்பின் பெயர் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு | | நோக்கங்கள் |
| --- | --- | --- | --- |
| | முதலீட்டுச் பெறுமதி | வங்கி மீதி | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| இலங்கை தீவிர சிகிச்சைப் பிரிவு மன்ற நம்பிக்கைப் பொறுப்பு | 1,310,000 | 148,768 | இலங்கை தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குரிய பொருட்களை வழங்குதல் |
| மலையக விளையாட்டு, கலை, கைத்தொழில் மற்றும் கலாசார நம்பிக்கை பொறுப்பு | 1,114,171 | 304,528 | கண்டி கலாசார நிலையத்தின் கலாசார நடவடிக்கைகளுக்கு நன்கொடை வழங்குதல் |
| கலாசார நிலைய நம்பிக்கைப் பொறுப்பு | 12,241,584 | 219,563 | அனைத்துக் கலாசார நிலையங்களினதும் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்காக நன்கொடை வழங்குதல் |
| லொக்குகே டியூடர் வீரசிங்ஹ சஹன உதய முதியோர் இளைப்பாறுகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 2,540,392 | 363,366 | நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் வேண்டுகோளின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளல். |

**(ஈ) டீ.பீ. ஜயதிலக பூதல்**

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் டீ.பீ. ஜயதிலக பூதலுக்குரிய பேரேட்டுக் கணக்கில் 2013 ஆம் ஆண்டிறுதியில் ரூபா 5,819,882 வரவு மீதி நிலவியது. இந்த பூதலில் பல வருடங்களாக முன்கொண்டு வரப்பட்டவாறிருக்கும் மீதிகளைக் கவனத்திற் கொள்ளாமல் 2013 ஆம் ஆண்டில் ரூபா

3,219,165 தொகை செலவிடப்பட்டமை தொடர்பில் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) டீ.பீ. ஜயதிலக்க நம்பிக்கைப்பொறுப்பு உரித்துறுதியின் 14 (ஈ) பந்தியின் பிரகாரம் கல்வி உதவி வழங்கப்பட வேண்டிய விதம் குறிப்பாக காண்பிக்கப்பட்டிருந்ததெனினும், அதற்கு முரணாக 02 சந்தர்ப்பங்களில் ரூபா 110,000 தொகையான நன்கொடைகள் செலுத்தப்பட்டிருந்தன.

(ii) நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியின் 10 ஆம் பந்தியின் பிரகாரம் சமய நன்கொடைகளை செலுத்த முடியுமெனினும், பூதலின் வரவு மீதியொன்று உள்ள போது, கட்டுப்பாடு அல்லது முறையான நடைமுறையொன்றில்லாமல் சமய நன்கொடைகள் மற்றும் மாணவர் உதவு தொகைகள் செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. விபரங்கள் வருமாறு.

| வருடம் | வருட ஆரம்பத்தின் வரவு மீதி | செலுத்திய சமய நன்கொடைகளின் பெறுமதி | மாணவர் உதவு தொகை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2013 | 8,798,294 | 1,206,550 | 109,900 |
| 2014 | 5,819,882 | 493,000 | 290,000 |

(iii) நம்பிக்கைப் பொறுப்பிற்குரிய சொத்துக்கள் தொடர்பான விரிவான பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) நம்பிக்கைப் பொறுப்பு பூதல்கள் தொடர்பான கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) 2014 ஆம் ஆண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பு பூதல் இறுதிக் கணக்குகள் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த நம்பிக்கைப் பொறுப்பு இறுதிக் கணக்குகளில் ஹிரஹன்தயாவ தோட்டத்திற்குரிய கணக்கு மற்றும் சமய மற்றும் சமூக சேவைகள் பொது நம்பிக்கைப்பொறுப்புக்குரிய கணக்கு கைவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அந்த வருடங்களின் இறுதிக் கணக்குகள் மூலம் அனைத்து நம்பிக்கை பொறுப்புகள் தொடர்பிலும் சரியானதும் உண்மையானதுமான நிலைமை காட்டப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒரு நம்பிக்கைப் பொறுப்பிடம் பல்வேறு ஆதனங்கள் காணப்படும் போது நம்பிக்கைப் பொறுப்பிற்கு தனியானதொரு கணக்கினைப் பேணுவதற்குப் பதிலாக பல்வேறு சிறு கணக்குகள் பேணப்பட்டிருந்ததுடன், அவ் அனைத்துக் கணக்குகளும் ஒரு கணக்காக பொழிப்பாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.10 முறையற்றக் கொடுக்கல் வாங்கல்கள்

---

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

**(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறையிலிருந்து விலகல்**

கணனி அச்சுப்பிரதி இயந்திர பழுதுபார்த்தல் அல்லது சேவை வழங்கும் போதும், மற்றும் அலுவலக எழுது கருவிகள், உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போதும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்கு சேவை வழங்கும் நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட பெயர்ப் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், சேவை வழங்கள் தொடர்பில் சேவை உடன்படிக்கைகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிராதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3:4.3 வழிகாட்டியின் பிரகாரம் செயற்பட்டிராததுடன், 3:4.1 வழிகாட்டியின் பிரகாரம் கூறுவிலை கோரப்படாத காரணத்தால், போட்டி அடிப்படையிலான விலைகளின் கீழ் கிடைக்க வேண்டிய பொருளியல் நலன்களை திணைக்களம் இழந்திருந்தது.

**(ஆ) அம்புளுவாவ சுற்றாடல் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பு**

கணக்காய்வுத் திகதியான 2014 யூலை 1 ஆந் திகதியில் உள்ளவாறான ஐந்தொகையின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் வங்கி மேலதிகப்பற்று ரூபா 22,771,316 ஆக இருந்தது. இந்த நம்பிக்கைப் பொறுப்பில் 2013 ஆம் ஆண்டு முதல் 2014 யூலை 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் ரூபா 18,966,869 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும், அந்தக் கொடுப்பனவுகள் நம்பிக்கைப்பொறுப்பின் நோக்கங்களுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 8.11 நட்டங்களும் இழப்புகளும்

2007 சனவரி 27 ஆந் திகதி திணைக்களத்தின் வாகனமொன்று விபத்துக்குட்பட்டமையால் ரூபா 254,038 இழப்பு ஏற்பட்டிருந்தது. அந்த இழப்பு ஏற்பட்டு சுமார் 8 வருட காலம் கடந்திருந்ததெனினும், உரிய பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அந்த நட்டத்தை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**8.12 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த பின்தொடர் நடவடிக்கைகள் முடிவடையாத பந்திகளின் தொடர்பு கீழே காணப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| **2012** | **5.1** | **பிரமுக வங்கியில் நிதி முதலீடு**<br><br>2008 ஏப்ரல் 23 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்ட பொது நம்பிக்கைப் பொறுப்புகள் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற நம்பிக்கைப் பொறுப்புகள் மற்றும் 40 பூதல்களுக்குரிய ரூபா 129,052,032 அவ் வங்கி மூடப்பட்டதன் பின்னர் அரசாங்கம் அறவிட வேண்டிய வைப்பீட்டுப் பொறுப்பாகக் கருதப்பட்டு அரசாங்கத்தின் சேமிப்பு வங்கியில் அரசாங்கத்திற்குரிய பங்கு மூலதனமாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் மூடப்பட்ட வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த அந்த ரூபா 129,052,032 தொகைக்காக நிலவும் சாதாரண வட்டி வீதாசாரத்தின் அடிப்படையில் அறவிட வேண்டிய ரூபா 160 மில்லியன் அளவிலான வட்டி வருமானம் கணக்காய்வுத் திகதியான 2014 இன் இறுதியளவிலும் பெறப்பட முடியாதிருந்தது. |
| **2012** | **9** | **பொது முதலீட்டு வட்டிக் கணக்கு**<br><br>(i) பொது நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கம் மற்றும் நிதி செலவிடப்படுகின்ற முறை தொடர்பான உறுதியின் 6(அ) பந்தியல் காண்பிக்கப்பட்டவாறு அதன் நிதி பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் தற்றுணிபின்படி எவ்வித முறைமையுமின்றி செலவிடப்படுவதற்கான சந்தர்ப்பம் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலைமையைப் பயன்படுத்தி, 2012 ஆம் |

ஆண்டினுள் ஈட்டிய விதத்தினை வெளிப்படுத்துவதற்கு சான்றுகள் இல்லாது மேற்கொள்ளப்பட்ட செலவினங்களால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இந்தக் கணக்கின் பற்றாக்குறை ரூபா 40,876,742 ஆகவிருந்தது. அவ்வாறே, அதன் முதலீட்டுப் பெறுமதி ரூபா 15,000,000 எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பிடம் இருக்கக்கூடிய முதலீடுகளின் பெறுமதி ரூபா 10,000,000 ஆகும்.

(ii) இந்த நம்பிக்கைப் பொறுப்பின் மூலம் சம்பளம் செலுத்தி பதவியணியினரைச் சேர்ப்பதற்கும் நீதிமன்ற அனுமதி பெறப்பட்டிருந்ததுடன் இந்த நிலைமை 1988 இன் திருத்திய பொது நம்பிக்கைப்பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் 3, 4,(12) மற்றும் 44 ஆம் பிரிவுகளின் மூலம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை விஞ்சி செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டளவில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் முறையற்ற வகையில் 28 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் சேவையில் ஈடுபடுத்தப்படுதல் என்பன முறையற்ற விதத்தில் இடம்பெற்றிருந்தன.

**2012 10.1 அம்புளுவாவ சுற்றாடல் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பை முறையற்ற வகையில் நிருவகித்தல்**

-----------------------------------------------------------------------------------------------

(i) அம்புளுவாவ பிரதேசத்தில் சுற்றாடல் மற்றும் உயிரியல் பல்வகைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் பாதுகாக்கும் நோக்கத்துடன் 2000 செப்தெம்பர் 01 ஆந் திகதி ரூபா 100,000 மூலதனத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நம்பிக்கைப்பொறுப்பிற்குரிய கணக்கில் கணக்காய்வுத் திகதியான 2013 செப்தம்பர் 11 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 22,709,170 வங்கி மேலதிகப்பற்று மீதி நிலவியது.

(ii) நம்பிக்கைப்பொறுப்பின் நோக்கங்களுக்கு முரணாக தனியார் வைத்திய பட்டியல்களை தீர்ப்பதற்காக 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,802,816 கூட்டுத் தொகையும், விமானச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,296,352 தொகையும், வாகன பழுதுபார்த்தல் மற்றும் காப்புறுதிக்காக ரூபா 314,731 தொகையுமாக ரூபா 4,413,899 தொகை முறையற்றவாறு நம்பிக்கைப்

பொறுப்பிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மேலும், முகாமைத்துவச் சபையின் அங்கீகாரமின்றியும் நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்களுக்கு முரணாகவும் 04 சந்தர்ப்பங்களின் போது முறையற்றவாறு ரூபா 2,300,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) 2010 திசெம்பர் மாதத்தில் ரூபா 3,431,400 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஜீப் வண்டியொன்று 2012 சனவரி மாதம் நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைத்துவச் சபையின் அங்கீகாரமின்றியும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு முரணாகவும் ரூபா 3,400,000 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(v) 2012 சனவரி மாதத்தில் வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,000,000 செலுத்தப்பட்டிருந்ததெனினும் அந்த வாகனத்தினைக் கொள்வனவு செய்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) வங்கியொன்றின் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 15,000,000 தொகைக்குரிய வட்டியினை அறவிடாமை, 14 சந்தர்ப்பங்களில் ரூபா 10,754,399 தாபிப்பின் அங்கீகாரமின்றி விடுக்கப்பட்டிருந்தமை, கணக்கு அறிக்கைகளை தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை போன்ற விடயங்களின் காரணமாக நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 08, 16, 18 நிபந்தனைகள் மீறப்பட்டிருந்தன.

**2012 10.3 பூதலைச் சுவீகரித்தல்**

-----------------------------------

பூதலைச் சுவீகரித்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஏப்ரல் 19 ஆந் திகதி உரிய நம்பிக்கைப் பொறுப்பு திணைக்களத்தின் பொறுப்பில் வந்ததன் பின்னர், உள்ளாக்கப்பட்டதன் பின்னர், நம்பிக்கைப் பொறுப்பிற்குரிய சொத்துக்களைச் சுவீகரிக்கும் ஆரம்ப செயற்பாடுகளுக்காக அனுபவம் மற்றும் தகைமைகளையுடைய உள்ளபடியான நிரந்தர

பதவியணியினர் இருக்கும் போது, அச்செயற்பாடுகள் முறையான திட்டமிடலின்றி வெளிநபரொருவரால் நிறைவேற்றப்பட்டு பூதலுக்குரிய பணத்தில் ரூபா 1,003,955 தொகை 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்டிருந்தது. அந்தக் கொடுப்பனவை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரச வங்கிக் காப்பகம் ஒன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்த அந்த பூதலுக்குரிய தங்க ஆபரணங்கள் மற்றும் பெறுமதியான 80 சொத்து விடயங்கள் தொடர்பாக திணைக்களத்தின் கோவைகளிலும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iii) நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், பூதல் உரிமையாளருக்குரியதாக காணப்பட்ட வங்கிக்கணக்குகளின் பெறுமதி ரூபா 45,324,443 தொகையாக இருந்த போதிலும், கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம், அந்த மீதி ரூபா 51,906,005 ஆகும். அவ்வாறே, பூதல் உரிமையாளரிடம் நிலவிய மற்றுமொரு வங்கி மீதியொன்றின் பெறுமதி ரூபா 304,445 தொகை குறைத்து தகவல் குறிப்பிடப்பட்டு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iv) மேற்படி வங்கி மீதிகளுக்கு மேலதிகமாக நீதிமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்ட ஏனைய வங்கிகளில் காணப்பட்ட ரூபா 53,646,470 தொகையான மீதிகள் தொடர்பான விபரங்கள் உள்ளடங்கிய வங்கி அறிக்கைகள் பூதல் கோவைகளில் உள்ளடக்கப்பட்டிராமையால் அந்த மீதிகளின் சரியான தன்மையைக் கணக்காய்வில் உறுதிசெய்ய முடியாதிருந்தது.

(v) கணக்காய்வுத் திகதியான 2012 திசெம்பர் 20 ஆந் திகதியளவில் உரிய பூதல் உரிமையாளர் மரணமடைந்து 02 வருடங்களும் 08 மாதங்களும் கடந்திருந்த போதிலும் அவரின் இறுதி விருப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டபடி அவருக்குச் சொந்தமான

பண்டராவளையில் அமைந்துள்ள வீட்டில் ‘‘சில்மாதா ஆராமய’’ ஆரம்பித்தலும், அதில் தியானப் பயிற்சி நிலையத்தை நடாத்துவதும் போன்ற நடவடிக்கைகள் கொழும்பு மஹாபோதி சங்கத்துடன் ஒருங்கிணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, இலங்கை மகாபோதி சங்கத்தின் பிரதிநிதியொருவரை உள்ளடக்கிய 06 நபர்களுடன் பணிப்பாளர் சபையொன்றை நம்பிக்கைப் பொறுப்பை நிர்வகிப்பதற்கென நியமித்திருக்கவில்லை.

**2012 13.2 முறையற்ற நியமனம் மற்றும் கடமை கையளித்தல்**

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக முறையான அங்கீகாரம் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு முரணாக 28 உத்தியோகத்தர்கள் 2012 ஆம் ஆண்டில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். அந்த ஆட்சேர்ப்பிற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அந்த உத்தியோகத்தர்களுக்கு முறையற்ற விதத்தில் நம்பிக்கைப் பொறுப்புகள் மற்றும் நிதியங்களின் நிதிகள் பயன்படுத்தப்பட்டு நிதி சேகரித்து நடாத்திச் செல்லப்படும் சமய மற்றும் சமூக சேவைகள் பொது நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் எனும் நிதியத்திலிருந்து சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு நியமிக்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்கள் தொடர்பில் கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தகைமையைப் பரிசோதிக்காது வாரத்திற்கு 3 நாட்கள் மாத்திரம் சேவைக்குச் சமூகமளிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இலங்கை பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் 2012 மே 01 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் சட்டத்தரணியொருவர் இணைத்துக்கொள்ளப்பட்டு மாதமொன்றிற்கு ரூபா 35,000 படியாக வழங்கப்பட்டிருந்தது. 2012 மார்ச் 02 ஆந் திகதிய கடமை கையளித்தல் கடிதத்தின் பிரகாரம் திணைக்களத்தின் நிரந்தர பதவியான பிரதிப் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் சகல கடமைகளும் அந்த உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றில்லாமல் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக ஒரு உத்தியோகத்தர் சேர்க்கப்பட்டதன் பின்னர் இந்த உத்தியோகத்தருக்கு விசாரணை உத்தியோகத்தர் பதவி வழங்கப்பட்டு அவர் திணைக்களத்தின் விசாரணைப் பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்குத் திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படுகின்ற இரண்டு பூதல்களுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக அந்த பூதல்களிலிருந்து மாதமொன்றிற்கு ரூபா 20,000 செலுத்தப்பட்டிருந்தது.

2013 4.4 **வெளிநாட்டு நட்ட ஈடு செலுத்தல் முறையாக முகாமை செய்யப்படாமை**

---

வெளிநாடுகளில் கடமையில் ஈடுபட்டிருக்கும் போது அகால மரணமடையும் அல்லது அங்கவீனமுறும் நிலைக்குள்ளாகும் இலங்கையர்களுக்கு, வெளிநாடுகளிலிருந்து அவர்களின் உரித்தாளர்களுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நட்ட ஈட்டுத் தொகையினைச் செலுத்தல் உரிய கவனத்துடனும் செயலாற்றலுடனும் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(அ) அதன் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வெளிநாட்டு நட்ட ஈட்டுத் தொகை ரூபா 41,623,427 ஆக இருந்ததுடன் அந்த நட்ட ஈட்டுத் தொகை, திணைக்களத்தின் வங்கிக் கணக்கில் 06 மாதங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) வெளிநாட்டு நட்ட ஈடு செலுத்தல் தாமதமடைந்ததால் நட்ட ஈட்டுத் தொகையின் அடிப்படையில் தீர்வையாகும் வட்டி நலனை நட்ட ஈட்டு உரிமையாளருக்கு வழங்கக்கூடிய நடைமுறையொன்று திணைக்களத்தினால் பின்பற்றப்பட்டு இருக்கவில்லை. இதன் காரணத்தால் நட்ட ஈட்டுத் தொகையின் அடிப்படையில் தீர்வையாகின்ற வட்டி திணைக்களத்தின் பொது நிதிக் கணக்கில் சேகரிக்கப்பட்டு முறையற்ற கொடுப்பனவுகளுக்குச் செலவு செய்யப்படுவதற்கான சாத்தியக்கூறு உள்ளமை அவதானிக்கப்பட்டது.

**2013 4.8 (ஆ) தொங்கல் கணக்கு**

நம்பிக்கைப் பொறுப்பு நிதி தொடர்பாக கணக்கு வைக்கும் சரியான திட்டமொன்று காணப்படாமையால் பூதல்கள் மூலம் திணைக்களத்திற்குக் கிடைக்கின்ற வட்டிப் பணம் செலவு வைக்கப்பட வேண்டிய முறை குறிப்பாக இனங்காணப்பட முடியாது அது தொடர்பான தகவல்கள் கிடைக்கும் வரை தொங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அக் கணக்கின் தகவல்களை உரியவாறு இனங்கண்டு தீர்க்கப்படாமையால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 8,353,407 மீதி அவதானிக்கப்பட்டது.

**2013 4.8 (ஈ) கடவத்தை-மஹர நகர அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு**

மஹர தேர்தல் பிரதேசத்தின் நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்காக பங்களித்தல் மற்றும் லசந்த அலகியவன்ன மன்றத்தின் நடவடிக்கைகளுக்காக முடியுமான சந்தர்ப்பங்களில் நிதிசார் பங்களிப்பை வழங்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட ‘‘கடவத்தை – மஹர நகர அபிவிருத்தி செயற்திட்ட நம்பிக்கைப் பொறுப்பு’’ தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் மூலதனத்திற்கு கிடைக்கின்ற வட்டி வருமானத்தில் அரசாங்கக் கட்டணங்களை அறவிட்டதன் பின்னர் எஞ்சிய பணம் நிதி மூலகத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டுமெனவும் 09 (ஆ) பந்தியின் பிரகாரம் நிர்வாக கட்டுப்பாட்டுச்சபையின் அங்கத்தவர்களின் ஒருங்கிணைப்பாட்டின் அடிப்படையில் தாபகரால் மேற்கொள்ளப்படுகின்ற எழுத்துமூல வேண்டுகோளுக்கு இணங்க இந்த வட்டி தொகை விடுவிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அதற்கு முரணாக மூலதன அதிகரிப்பிற்காக தனியார் தொலைபேசி நிறுவனமொன்றிலிருந்து கிடைத்த ரூபா 1,500,000 முதலீடு செய்யப்படாமல், மூலதனக் கட்டணங்களும் அறவிடப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ii) நம்பிக்கைப் பொறுப்பின் உறுதியின் 09 (ஆ) பந்தியின் பிரகாரம் வட்டித் தொகையினை விடுவிப்பதற்கு முன்னர் இதற்கு முன்னர் விடுவிக்கப்பட்ட தொகையில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்களுக்குரிய விபரமான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணாக ரூபா 3,128,250 கூட்டுத் தொகை 2 சந்தர்ப்பங்களில் விடுவிக்கப்பட்டிந்தது.

**2013 6.9 (அ) பூஜைப் பொருட்களின் கொள்வனவு**

-----------------------------------------------------

திணைக்களத்தால் 2013 ஆம் ஆண்டினுள் அடபிரிகட மற்றும் ஏனைய பூஜைப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 19,838,920 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முறையான பிரகாரம் கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றாது அட்டபிரிகர மற்றும் பூஜைப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 19,838,920 கூட்டுத் தொகை 5 நிறுவனங்களுக்கு 2013 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒகேவல பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு 150 காவி உடைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 112,500 செலுத்தப்பட்டு இருந்ததெனினும், கொள்வனவுகளுக்குரிய பற்றுச்சீட்டுக்கள் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுடன் கோவைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே, கொடுப்பனவுகளின் உண்மையான தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மை தொடர்பில் கணக்காய்வின் போது திருப்தி கொள்ள முடியாதிருந்தது. மேலும், ஒகேவல பிரதேச செயலகம் காசைப் பெற்றுக்கொண்டமைக்கான உறுதிச்சீட்டும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சமய அலுவல்களுக்காக அல்லது விகாரைகளுக்கு பூஜைப் பொருட்களை பகிர்ந்தளிக்கும் போது திணைக்களத்தில் அந்தப் பொருட்கள் முறையாக கையேற்கப்படாதும் பதிவு செய்யப்படாதும் பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. அதனால் இந்த பூஜைப்

பொருட்களுக்கான கொடுப்பனவினை மேற்கொள்ளும் போது நிதிப்பிரமாணம் 137(5) இன் ஏற்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பபடாமலிருந்தன.

(ஈ) சமய நிறுவனமொன்றுக்கோ அல்லது எந்தவொரு பிரதிநிதிக்கோ அல்லது நபரொருவருக்கோ பூஜைப்பொருட்களை வழங்கும் போது எழுத்து மூல வேண்டுகோளின்றி பொருட்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(உ) திணைக்களம் பூஜைப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது அதற்காக எழுத்து மூல சான்றொன்றாக பொருட்களை கொள்வனவு செய்வதற்கான அனுமதிப்பத்திரமொன்று பயன்படுத்தப்பட்டு இருந்ததெனினும், அந்த அனுமதிப்பத்திரம் தொடரிலக்கத்துடன் அல்லது மறு பிரதிநிதிகளுடன் அச்சிடப்பட்டிருக்கவில்லை. அதனால் வழங்கப்பட்ட பொருள் அனுமதிப்பத்திரம் உரிய முறையில் திணைக்களத்திற்குக் கிடைத்ததா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்ததுடன், பூஜைப் பொருட்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது பொருள் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் பட்டியல்களில் குறிப்பிடப்பட்டு வழங்கப்பட்ட பூஜைப்பொருட்கள் ஒப்பிடப்பட்டுப் பார்க்கப்படாது அந்த நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் அடிப்படையில் மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) மேற் குறிப்பிடப்பட்ட பொருள் விநியோக அனுமதிப்பத்திர பரிசோதனையின் போது கீழ்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அதிகாரம் பெற்ற திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரின் முறையான அங்கீகாரமின்றி தனியார் நிறுவனங்கள் மூலம் அனுமதிப்பத்திரம் கொண்டு செல்வோருக்கு பூஜைப் பொருட்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) ஒவ்வொரு நபருக்கோ அல்லது நிறுவனத்துக்கோ பூஜைப் பொருட்களைப் பகிர்ந்தளிக்கும் போது அவை நிர்ணயிக்கப்பட்ட அளவில் கையேற்கப்பட்டமையை உறுதி செய்யாமல் பொருட்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் உரிய தரப்பினருக்கு உரிய பிரகாரம் பொருட்கள் கிடைத்ததா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

(iii) பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்கு நேரடியாக பூஜைப் பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அந்தப் பொருட்களின் பெறுவனவு மற்றும் விநியோகம் தொடர்பில் முறையான பதிவேடுகளோ அறிக்கைகளோ திணைக்களத்திடம் காணப்படவில்லை.

## 8.13 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

**ஹிரஹந்தயாவ தோட்டம்**

-----------------------------------------

திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் ‘சில்வா விஜேசேகர’’ பூதலுக்குரிய ஹிரஹந்தயாவ தோட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக்கணக்காய்வு பரிசோதனையின் போது கீழ்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டின் வருடாந்த செயல் நடவடிக்கையின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அண்மிக்க முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு.

(i) தோட்டப் பிரிவின் செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான ஹிரஹந்தயாவ தோட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலாபம் ரூபா 7,391,966 ஆக இருந்த போதிலும், உள்ளவாறான இலாபம் ரூபா 1,394,457 ஆக இருந்தது. அதன் பிரகாரம், உள்ளவாறான இலாபம் எதிர்பார்க்கப்பட்ட இலாபத்தில் சுமார் 19 சதவீத பெறுமானத்தைக் கொண்டிருந்தது.

(ii) 2014 ஆம் ஆண்டிற்கென தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் 2 ஊடு பயிர் வகைகளில் ரூபா 57,500 வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், உள்ளவாறாக ரூபா 7,600 மாத்திரம் ஈட்டப்பட்டிருந்ததுடன், மதிப்பிடப்படாத 3 ஊடுபயிர்களில் ரூபா 28,944 தொகையான வருமானம் கிடைக்கப்பெற்றிருந்தது.

(iii) தெங்குப் பயிர்ச்செய்கையில் 2014 ஆம் ஆண்டில் 260,000 தேங்காய்கள் மதிப்பிடப்பட்டிருந்ததெனினும், 169,074 தேங்காய்களின் சாகுபடி பதிவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தேங்காய்களின் அளவில் 65 சதவீதமான அளவு எய்தப்பட்டிருந்தது.

(ஆ) ஹிரஹந்தயாவ தோட்டத்தின் ஏனைய வருமானம் மற்றும் ஊடுபயிர்ச்செய்கை 2012 மார்ச் மாதத்தின் பின்னர் நாளதுவரையாக்கப்பட்டிருக்காத காரணத்தால் ஊடுபயிர்ச்செய்கை தொடர்பான எழுத்துமூல தகவல்கள் எதுவும் தலைமை அலுவலகத்தில் காணப்படவில்லை. அதன் பிரகாரம், பயிர் செய்யப்பட்டுள்ள ஊடுபயிர்கள் தொடர்பான விபரங்கள், ஆண்டினுள் கிடைக்கப்பெற்ற அறுவடையின் அளவு, பெறப்பட்ட அறுவடையில் நலன்புரி சங்கத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்ட அளவு மற்றும் அந்தக் கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்தல் தொடர்பில் கணக்காய்வில் திருப்தியடைய முடியவில்லை.

(இ) எட்டு ஏக்கர்கள் முழுவதும் வருமானம் உழைக்கக்கூடிய வெற்றிகரமான சிறு பயிர்ச்செய்கையாக பயிரிடப்பட்டிருந்த கறுவாப்பயிர்ச்செய்கை தொடர்பில் அதிகாரிகளின் உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டில் 71,000 தேங்காய்கள் விதை தேங்காய்களுக்காக தெங்கு அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டமையின் அடிப்படையில் ரூபா 3,014,600 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. எனினும், 2014 ஆம் ஆண்டின் இறுதியில் தெங்கு அபிவிருத்திச் சபைக்கு விநியோகிக்கும் தேங்காய்களின் அளவில் குறைவும், 2015 ஆம் ஆண்டின் முதலாம் தவணையில் தேங்காய்கள் விநியோகிக்கப்படாமையும் அவதானிக்கப்பட்டன.

(உ) 2014 ஆம் ஆண்டில் நலன்புரிச் சங்கத்தின் தேங்காய் விற்பனை மூலமான வருமானமாக ரூபா 114,702 தொகை உரிய நம்பிக்கைப் பொறுப்பின் வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டுமெனினும்,ரூபா 85,298 மாத்திரம் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டமையால், ரூபா 29,404 வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.14 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 05 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 46 | 27 | 19 |
| | **மொத்தம்** | **54** | **34** | **20** |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 19 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.